[வலைப்பின்னல் மாற்றுமுறை]

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *1999 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகச் சட்டம்*

---

[*1999, ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1999, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி*** II **இற்குக்** *குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை: ரூபா *14.00*** **தபாற் செலவு : ரூபா 5.25**

## 1999 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகச் சட்டம்

*[1999 ஆம் ஆண்டின் செத்தெம்பர் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*ச.வ. - ஓ. 38/98*

**இலங்கை உள்ளூர் ஆளுகைநிறுவகத்தைத் தாபிப்பதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டமானது, 1999 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய திகதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

### பகுதி I

### இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தைத் தாபித்தல்

**2.** (1) இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம் என அழைக்கப்படும் நிறுவகம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" என்று குறிப்பீடு செய்யப்படும்.) இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்தைத் தாபித்தல்.

(2) நிறுவகமானது (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரால் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றையும் கொண்ட குழுவொன்றாதல் வேண்டும், அத்துடன் அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

3. நிறுவகத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :- நிறுவகத்தின் பணிகள்.

(அ) மாகாணசபைகளினதும் உள்ளூரதிகாரசபைகளினதும் உறுப்பினர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் ஆகியோர் அவர்களுடைய அலுவலகமுறையான கடமைகளைத் திறமையாகவும் பயனுறுதியுடனும் நிறைவேற்றுவதற்கு அவர்களை ஆற்றலுடையவர்களாக்கும் நோக்குடன் அவர்களுக்குப் பயிற்சியளித்தல்.

(ஆ) மாகாண உள்ளூராட்சி முகாமத்துவத்தில் ஆய்வரங்குகளையும் பயிற்சிநெறிகளையும் நடாத்துதல் ;

(இ) நிறுவகத்தால் நடாத்தப்பட்ட பயிற்சிநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்தவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்குதல் ;

(ஈ) சிறந்த ஆளுகையை உறுதிப்படுத்தும் நோக்குடன் நாட்டின் தகுதிவாய்ந்த மாகாண, உள்ளூராட்சி அலுவலர்களையும் ஆளணியினரையும் கொண்ட ஊழியர்கோப்பொன்றைக் கட்டியெழுப்புவதில் உதவுதல் ;

(உ) மாகாண, உள்ளூராட்சி முகாமைத்துவத்தில் தனித்துவம் பெற்றவர்களின் சேவைளை மாகாண சபைகளுக்கும் உள்ளூரதிகார சபைகளுக்கும் கிடைக்கச் செய்தல் ;

(ஊ) மாகாணசபைகளுக்கும், உள்ளூரதிகார சபைகளுக்கும், அவற்றின் ஒழுங்குபடுத்தல் முறைமைகளையும் முகாமைத்துவ ஆற்றல்களையும் மேம்படுத்த உதவுதல் ;

(எ) மாகாண மற்றும் உள்ளூராட்சித்துறையில் உசாத்துணைப் பணிகளைப் பொறுப்பேற்றல்;

(ஏ) மாகாண மற்றும் உள்ளூராட்சி ஒழுங்கமைப்பு சார்ந்த முகாமைத்துவ முறைமைகளிலும் நடைமுறைகளிலும் ஒரு நுணுக்கமான மதிப்பீட்டைச் செய்வதற்காக மன்று ஒன்றை ஏற்பாடுசெய்தல்;

(ஐ) மாகாண முகாமைத்துவ அபிவிருத்திக்கும் பயிற்சி அலகுகளுக்கும் உள்ளூரதிகாரசபைகளுக்கும் முகாமைத்துவ அபிவிருத்தியிலும் அத்துடன் வேலை நடைமுறைகளைத் தாபித்தலிலும், நட்டஈட்டு முறைமைகளை தீர்மானித்தலிலும் அத்துடன் பொதுவாக அவர்களுடைய உற்பத்தியாற்றலை மேம்படுத்துவதற்கும் உதவுதல் ;

(ஒ) நிறுவகத்தின் குறிக்கோள்களுக்கு ஒத்த குறிக்கோள் களையுடைய, இலங்கையிலோ அல்லது வெளி நாட்டிலோ உள்ள, வேறு நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல் ;

(ஓ) மாகாண மற்றும் உள்ளூராட்சி பற்றி மாநாடு களையும், கருத்தரங்குகளையும் நடாத்துவதற்கு அனுசரணை வழங்குதலும் நடாத்துதலும், அத்துடன் அதுபற்றிய புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் வெளியிடுதலும் ;

(ஔ) உள்ளூராட்சி மீதான தேசிய கொள்கைகளைத் தொகுத்து அமைக்கும் நோக்கங்களுக்காக அமைச்ச ருக்கு அவசியமான தரவுகளையும் தகவல்களையும் வழங்குதல் ;

(க) நிறுவகத்தின் பணிகளையும் செயற்பாடுகளையும் பற்றி, இயைபான நிறுவனங்களுக்கும் பொது மக்களுக்கும் தகவல்களைப் பரப்புதல் ;

(ங) மாகாண மற்றும் உள்ளூராட்சி பற்றிய எல்லா அம்சங்களிலும் ஆராய்ச்சி நடாத்துதலும் ஊக்கு வித்தலும் அத்துடன் உதவுதலும்.

**4.** நிறுவகமானது, அதன் பணிகளைப் புரிவதற்காக நியாயமாக அவசியமாகின்றவாறான அத்தகைய தத்துவங்களை, குறிப்பாகப் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :- *நிறுவகத்தின் தத்துவங்கள்.*

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எவ்வகையிலேனும் ஏதேனும் முறையில் கொள்ளுதற்கு அத்துடன் வைத்திருப்பதற்கு அத்து டன் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுப்பதற்கு அல்லது கொடுப்பதற்கு, ஈடுவைப்பதற்கு, அடகுவைப்பதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கு ;

(ஆ) பயிற்சி நிலையங்களைத் தாபிப்பதற்கும் பேணு வதற்கும் ;

(இ) அதனது அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், வேலைக்கமர்த்துதல், ஊதியமளித்தல் அத்துடன் அவர்களின் மீது ஒழுக்காற்றுக் கட்டுப் பாட்டைப் பிரயோகித்தல் ;

(ஈ) நிறுவகத்தால் புரியப்பட்ட ஏதேனும் சேவைக்கான கட்டணத்தை அல்லது விதிப்பனவை அறவிடல் ;

(உ) நிறுவகத்தின் நோக்கத்திற்காகத் தேவைப்படும் ஏதேனும் பொறிகளையும் சாதனங்களையும் இறக்குமதிசெய்தல், அத்துடன் நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அத்தியாவசியமான ஏதேனும் பொறிகளையும், சாதனங்களையும் அத்துடன் வேறு உதவிகளையும் பெற்றுக் கொள்ளு தல் ;

(ஊ) அதன் அலுவலர்களினதும், சேவையாளர்களினதும் வேலை செயற்பாட்டுத் தராதரங்ளைத் தாபித்தலும் அத்தகைய தராதரங்களுக்கிணங்க அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் செயற்பாட்டை மதிப்பீடுசெய்தலும் அத்துடன் அதன்மீது நடவடிக்கை எடுத்தலும் ;

(எ) அதன் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் நலன்பேணல் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஏ) அதன் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் தொடர்பில், அவர்களுடைய நியமனம், பயிற்சி பதவி உயர்வு ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, நடத்தை அத்துடன் அவர்களுக்கு விடுமுறை வழங்குதல் உள்ளடங்கலாக, விதிகளை ஆக்குதல் ;

(ஐ) அதன் பணிகளைப் புரிவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல் ;

(ஒ) நிறுவகத்தின் பொதுவான நிர்வாகம் தொடர்பில் விதிகளை ஆக்குதல் அத்துடன் ;

(ஓ) நிறுவகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உசிதமான அல்லது இடைநேர்விளைவான வேறு எல்லா விடயங்களையும் செய்தல்.

ஆட்சிப் பேரவையைத் தாபித்தலும் அமைத்துரு வாக்குதலும்.

**5,** (1) நிறுவகத்தின் நிருவாக, முகாமைத்துறை அலுவல்கள் பின்வருவோரைக் கொண்ட ஆட்சிப் பேரவைக்கு உரித்தாக் கப்படல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "பேரவை" என்று குறிப்பீடு செய்யப்படும்) :-

(அ) பதவிவழி உறுப்பினர்கள், அதாவது

(i) மாகாணசபைகள், உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், இவர் சபையின் தவிசாளராக இருத்தல் வேண்டும் ;

(ii) நிதி, திட்டமிடல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(iii) வீடமைப்பு, நகர அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(iv) சுற்றாடல் என்னும் விடயத்திற்குப் பொறுப் பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(v) பொதுநிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(vi) அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பண்பாட்டலுவல்கள் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுப் பிரநிதியொருவர் ;

(vii) பல்கலைக்கழகமொன்றின் எந்த வளாகத் தினால் வழங்கப்படும் பயிற்சி நெறியொன்றில் உள்ளூராட்சி என்னும் பாடம் உள்ளடக் கப்பட்டுள்ளதோ அந்த வளாகத்தின் உயர் கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பீடத்தலைவர் ;

(viii) பன்னிரெண்டாம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் பணிப்பாளர் இவர் சபையின் அமைப்பாளராதல் வேண்டும்.

(ஆ) பின்வரும் வேறு உறுப்பினர்கள் அதாவது :-

(i) தனியார்துறையிலிருந்து அல்லது அரச சார்பற்ற ஒழுங்கமைப்பொன்றிலிருந்து அமைச்சரின் அபிப்பிராயப்படி மாகாண அல்லது உள்ளூராட்சியில் அனுபவம் பெற்றிருப்பவரான ஆளொருவர் ;

(ii) உயர்தொழில் ஒழுங்கமைப்பொன்றிலிருந்து, அமைச்சரின் அபிப்பிராயப்படி மாகாண அல்லது உள்ளூராட்சியில் அனுபவம் பெற்றிருப்பவரான ஆளொருவர் ;

(iii) உள்ளூரதிகாரசபைகளின் கழகங்களிலிருந்து அமைச்சரால் நியமிக்கப்படும் ஆளொருவர் ;

(iv) அமைச்சரின் அபிப்பிராயப்படி மாகாண அல்லது உள்ளூராட்சியில் அனுபவம் பெற்றிருப்பவர்களான ஆட்களிருவர்.

(2) ஆளொருவர்

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது மாகாணசபையொன்றின் உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது வரின் ; அல்லது

(ஆ) அவர், நிறுவகத்தால் அல்லது நிறுவகத்தின் சார்பில் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் உரிமையை அல்லது நலனை நேரடியாக அல்லது மறைமுகமாகக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்தால் ; அல்லது

(இ) சபையின் உறுப்பினரொருவராக அவரது பணிகள் அவரால் புரியப்படுவதை பங்கப்படுத்தும் விதத்தில் பாதிக்கக்கூடிய சாத்தியமுள்ள நிதிசார்ந்த அல்லது வேறு அக்கறையை அவர் கொண்டிருந்தால்.

பேரவையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதென்று அல்லது தொடர்ந்திருப்பதினின்று தகைமையிழந்தவராதல் வேண்டும்.

(3) ஐந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் ஒவ்வோர் உறுப்பினரும் முன்னரே பதவிதுறத்தலின் மூலம் பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் பதவியை வறிதாக்கினாலன்றி, மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(4) (அ) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவையின் உறுப்பினர் ஒருவர் இறக்குமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து அமைச்சரானவர் அப்பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு இறந்தவரான, பதவிவிலகியவரான அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டவரான உறுப்பினரின் இடத்தில் நியமிக்கலாம்.

(ஆ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவையின் எவரேனும் உறுப்பினர் இறப்பினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் முன்னதாகவே பதவியை வறிதாக்கினாலன்றி, அவர் எவ்வுறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(5) ஐந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவையின் உறுப்பினர் ஒருவர் சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராயிருக்குமிடத்து அமைச்சரானவர் அப்பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவருடைய இடத்திற்குச் செயலாற்றுவதற்கென வேறோர் ஆளை நியமிக்கலாம்.

*பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.*

**6.** (1) அமைச்சரானவர் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை காட்டப்பட்ட காரணங்களுக்காக நீக்கலாம்.

*பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிவிலகல்.*

**7,** ஐந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவையின் உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிட்டெழுதப்படும் கடிதத்தின்மூலம் எந்த நேரத்திலும் பதவி விலகலாம்.

*பேரவையின் உறுப்பினராக மீளநியமிக்கப் படுவதற்கான தகைமை.*

**8,** ஆறாம் பிரிவின்கீழ் பதவியிலிருந்து நீக்கப்பட்ட உறுப்பினரொருவரைத் தவிர 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்டவரும் பதவியை வறிதாக்குகின்றவருமான பேரவையின் வேறு உறுப்பினர் எவரும் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடைய வராதல் வேண்டும்.

*ஏதேனும் வெற்றிடம் காரணமாக அல்லது உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உளது என்ற காரணத்தினால் நிறுவகத்தின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.*

**9,** ஏதேனும் வெற்றிடமுளது என்ற காரணத்தால் அல்லது உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் குறைபாடு உளது என்ற காரணத்தினால் மட்டும் நிறுவகத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

*உறுப்பினர்களுக்கு ஊதியம்.*

**10,** பேரவையின் எல்லா அல்லது எவரேனும் உறுப்பினருக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அமைச்சரால் தீரமனிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியம் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

*பேரவையின் கூட்டங்கள்.*

**11.** (1) பேரவையின் கூட்டங்கள் ஆகக்குறைந்தது ஒவ்வொரு மாதத்திலும் ஒருமுறையாவது நடைபெறுதல் வேண்டும்.

(2) தவிசாளர், பேரவையின் ஒவ்வொரு கூட்டம்பற்றியும் ஆகக்குறைந்தது ஏழுநாள் அறிவித்தலை எழுத்தில் கொடுத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிவித்தலில் அத்தகைய கூட்டத்தில் கையாளப்படவுள்ள அலுவலைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பேரவையின் இரண்டு உறுப்பினர்களால் அவ்வாறு செய்யுமாறு எழுத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்ட ஏழு நாட்களுக்குள் தவிசாளர் பேரவையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(4) பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) தவிசாளர் பேரவையின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல் வேண்டும் என்பதுடன் சபையின் ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் சமுகமாயிராவிடத்து, சமூகமளித் திருக்கும் பெரும்பான்மை உறுப்பினர்களால் தெரிவுசெய் யப்படும் உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(6) பேரவையின் தவிசாளர் சுகயீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருப்பின் அமைச்சரானவர், அவருடைய இடத்தில் சொயலாற்றுவதற்குச் சபையின் வேறோர் உறுப்பினரை நியமிக்கலாம்.

(7) பேரவையின் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட வேண்டிய ஏதேனும் கருமத்தின்மீது அல்லது விடயத்தின்மீது வாக்குகள் சமமாக இருக்குமிடத்து அத்தகைய கூட்டத்தில் தவிசாளர் அவருடைய வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக் கொன்றை உடையவராதல் வேண்டும்.

(8) இப்பிரிவில் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, பேரவையானது, அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் தொடர்பிலும் நடவடிக்கைமுறையைத் தீர்மானித்தல் வேண்டும்.

பாகம் II

*நிறுவகத்தின் பணிப்பாளரினதும் நிறுவகத்தின் அலுவலர் களினதும் மற்றும் சேவையாளர்களினதும் நியமனம்*

*நிறுவகத்தின் பணிப்பாளரின் நியமனம்.*

**12**.(1) அமைச்சர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு, நிறுவகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராக இருக்க வேண்டியவரான (இதனகத்துப் பின்னர் பணிப்பாளர் எனக் குறிப்பீடுசெய்யப்படும்.) நிறுவகத்தின் பணிப்பாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர், இறப்பினால், பதவி விலகலினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதனால் முன்னரே அவர் பதவியை வறிதாக்கினாலன்றி, அவரது நியமனத் திகதியிலிருந்து ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு, பதவிவகித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர், பேரவையினால் அவருக்குக் கையளிக்கப் படக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்திலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(4) அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(5) பணிப்பாளருக்கு நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் வழங்கப்படல் வேண்டும்.

(6) பணிப்பாளரின் பதவியானது இறப்பின் மேல் (4) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல் அல்லது அப்பதவியை வகிப்பவரினால் அமைச்சருக்கு அதன் சார்பில் முகவரியிட்டனுப்பப்படும் கடிதம் மூலம் பதவி விலகுவதன்மேல் வறிதானதாக வருதல் வேண்டும்.

(7) நான்காம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி, பணிப்பாளராகப் பதவிவகிக்கின்ற ஆள் எவரும் பணிப்பாளராக மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(8) பணிப்பாளரின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்பட்டால், (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமனம் ஒன்று செய்யப்படும்வரை, பணிப்பாளரின் கடமைகளைப் புரிவதற்கு, பேரவையின் உறுப்பினர் ஒருவரை அமைச்சர் நியமிக்கலாம்.

*நிறுவகத்தின் பணியாட் டொகுதிக்கான நியமனங்கள் தொடர்பில் பேரவையின்*

**13**.(1)இச்சட்டத்தின் பிற ஏற்பாடுகளுக்கமைய, பேரவையானது -

(அ) நிறுவகத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் நிறுவகத்தின் பணியாட் டொகுதிக்கு நியமிக்கலாம் ;

(ஆ) அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் விலக்கலாம் என்பதுடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம்;

(இ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சம்பளங்களை, வேதனங்களை அல்லது வேறு ஊதியங்களை நிர்ணயிக்கலாம் ;

(ஈ) அத்தகைய அலுவலர்களினதும், சேவையாளர்களினதும் சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம் அத்துடன் ;

(உ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நன்மைக்காக சகாய நிதியங்களையும் திட்டங்களையும் தாபித்து ஒழுங்குபடுத்தலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் நிதியத்திற்கு அல்லது திட்டத்திற்கு உதவுதொகைகளையும் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள எல்லா அல்லது ஏதேனும் கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்படலாம்.

*நியமனங்கள் தொடர்பில் பேரவையின் தத்துவங்களைப் பணிப்பாளருக்குக் கையளித்தல்.*

14. (1) பேரவையானது, நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கான வேறு அலுவலர்கள் அல்லது சேவையாளர்களின் நியமனம் தொடர்பிலான அதன் எல்லா அல்லது ஏதேனும் தத்துவங்களைப் பணிப்பாளருக்குக் கையளிக்கலாம். இப்பிரிவின்கீழ் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் ஊதியம் உட்பட தொழிலின் நிபந்தனைகள், பேரவையின் ஒருப்பாட்டுடன் அவரால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் பணிப்பாளரால் செய்யப்பட்ட ஏதேனும் தீர்மானத்தினால் இடருற்ற ஆள் அதற்கெதிராக, பேரவைக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம். அத்துடன் அத்தகைய மேன்முறையீடு மீதான பேரவையின் தீர்மானம் இறுதியானதாகவிருத்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் நிறுவகத்தின் எவரேனும் அலுவலரை அல்லது சேவையாளரைப் பதவிநீக்குதலானது, அத்தகைய விலக்குதல் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி, பயனுறுதலாகாது.

*நிறுவகத்தின் பணியாட்டொகுதிக் குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.*

15. (1) பேரவையின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும், அவ்வலுவலரினதும் பொதுநிருவாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளரினதும் சம்மதத்துடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு அதே போன்ற சம்மதத்துடன் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட் டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டவிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையில் உள்ள அலுவலர் எவரும் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப் பட்டவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏறபாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஆள் ஒருவர் எந்த ஒப்பந்தத்தின் மூலம் குறித்துரைக் கப்பட்டதொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவையாற்ற இணங்கியுள்ளாரோ அந்த ஒப்பந்தத்தை அரசாங்கத்துடன் செய்துகொண்டுள்ளவாறான எவரேனும் ஆளை நிறுவகம் ஊழியத்திற்கமர்த்தியுள்ளவிடத்து, அவ்வாளினால் நிறுவகத்திற் கான ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற் கான சேவையாகக் கருதப்படல் வேண்டும்.

## பாகம் III

### நிதி

16. (1) நிறுவமானது தனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

நிறுவகத்தின் நிதயம்.

(2) நிறுவகத்தின் நிதியத்திற்குப் பின்வருவன வரவு வைக்கப்படல் வேண்டும்.

(அ) நிறுவகத்தின் பயன்பாட்டிற்காக பாராளுமன்றத் தினால் காலத்திற்குக்காலம் வாக்குப் பண்ணப் படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகைகள் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்று கையிலும் நிறுவனத்தினால் பெறப்பட்டவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள் அத்துடன்

(இ) கடன்கள், மானியங்கள் மற்றும் நன்கொடைகளாக, இலங்கையினுள் அல்லது வெளியேயுள்ள வளங்க ளிடமிருந்து நிறுவகத்தால் பெறப்பட்டவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகள்.

(3) நிறுவகத்தால் அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற அல்லது இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் நிதியத்தி லிருந்து செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுகின்ற வாறான எல்லாப் பணத்தொகைகளும் நிறுவகத்தின் நிதியத்தில் அறவிடப்படல் வேண்டும்.

**17**.நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

நிறுவகத்தின் நிதியாண்டு.

**18**. அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் நிறுவகத்தின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

கணக்குகளின் கணக்காய்வு.

**பாகம் IV**

**பொது**

*நிறுவகத்தின் உறுப்பினர்கள் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.*

**19.** பேரவையின் எல்லா உறுப்பினர்களும் நிறுவகத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக் கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குள் நிறுவகமானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.*

**20.** நிறுவகமானது இலஞ்சச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக்கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

*தகவல் வெளியிடுதல் மீதான தடை.*

**21.** (1) பேரவையின் உறுப்பினர் அல்லது நிறுவகத்தின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், இச்சட்டத்தின்கீழ் அவரது பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அல்லது நீதிமன்றம் ஒன்றினால் அல்லது ஏதேனும் சட்டத்தின் கீழ் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தும்போது அன்றி இச்சட்டத்தின்கீழ் அவரது பணிகளை நிறைவேற்றுகையில் அவரால் பெறப்பட்ட ஏதேனும் தகவலை, ஆள் எவருக்கும் வெளியிடுதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும் அரசாங்கம் தவிர்ந்த வேறொரு திறத்தவருடனான ஏதேனும் ஒப்பந்தத்தின் மூலம் அந்தரங்கமானதென கருதப்படுவதற்கு நிறுவகமானது கட்டுப்பட்டுள்ளதான கருமங்கள் தொடர்பான தகவல் எதுவும் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் வெளியிடப் படுதலாகாது.

ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்றவரான ஆள் எவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

நிறுவகத்திற்காக காணிகொள்ளற் சட்டத்தின்கீழ் அசையா ஆதனத்தைக் கொள்ளல்.

**22.** (1) நிறுவகத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசையா ஆதனமானது கொள்ளப்படத் தேவைப்படுத்தப்பட்டுள்ள விடத்தும் அத்துடன் அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் உத்தேச கொள்ளுதலை அங்கீகரிக்கின்ற விடத்தும் அச்சொத்தானது பகிரங்க நோக்கமொன்றிற்காகத் தேவைப்படுவதாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க காணி கொள்ளற் சட்டத்தின் கீழ் கொள்ளப்பட லாம் மற்றும் நிறுவகத்திற்குக் கைமாற்றவும்படலாம்.

(2) நிறுவகத்திற்காக காணி கொள்ளற் சட்டத்தின்கீழ் ஏதேனும் அசையா ஆதனத்தைக் கொள்ளுவதற்காகச் செலுத்தப் படற்பாலான ஏதேனும் தொகையானது, நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

அசையும் மற்றும் அசையா அரச ஆதனம் நிறுவகத்திற்குக் கிடைக்கப் படற்பாலதாகச் செய்யப்படல்.

**23.** (1) அரசின் ஏதேனும் அசையா ஆதனமானது நிறுவகத்தின் நோக்கத்திற்கு தேவைப்படுகின்றவிடத்து, அத்தகைய நோக்கமானது, முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ், எந்நோக்கத்திற்காக அத்தகைய ஆதனத்தின் ஒரு விசேட மானியக்கொடை அல்லது குத்தகை செய்யப்படலாமோ அந்நோக்கமாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடு கள் நிறுவகத்திற்கு அத்தகைய ஆதனத்தின் ஒரு விசேட மானியக்கொடைக்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

(2) அரசின் ஏதேனும் அசையும் ஆதனமானது நிறுவகத்தின் நோக்கத்திற்கு தேவைப்படுகின்றவிடத்து, அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம்,அத்தகைய ஆதனத்தின் உண்மையையும் பயன்பாட்டையும் நிறுவகத்திற்குக் கைமாற்ற லாம் என்பதுடன் அதற்கு உரித்துமாக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும் அரசின் ஏதேனும் அசையும் ஆதனத்தைப் பாதிக்கின்ற கட்டளை எதுவும், அத்தகைய ஆதனத்தின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் இன்றி இப்பிரிவின் முற்போந்த ஏற்பாட்டின்கீழ் ஆக்கப்படுதலாகாது.

*பேரவைக்கு விசேட அல்லது பொதுவான பணிப்புரைகளை வழங்குவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.*

**24.** (1) அமைச்சர், நிறுவகத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கான விசேட அல்லது பொதுவான பணிப்புரைகளை பேரவைக்கு எழுத்தில் வழங்கலாம் என்பதுடன் பேரவையானது அத்தகைய பணிப்புரைகளுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

(2) அமைச்சர் காலத்திற்குக்காலம், நிறுவகத்தின் வேலை தொடர்பில் அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவலை எழுத்தில் அவருக்குச் சமர்ப்பிக்குமாறு பேரவையைப் பணிக்கலாம்.

*விதிகள்.*

**25.** (1) பேரவையானது, எக்கருமங்களுக்காக விதிகள் செய்யப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ, தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் எல்லாம் அல்லது அவற்றுள் ஏதேனும் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(2) பேரவையினால் ஆக்கப்பட்ட விதி எதுவும் அமைச்சரினால் அது அங்கீகரிக்கப்படும் வரை பயனுறுவதாகாது.

*இச்சட்டத்தின் கீழ் அல்லது பேரவையின் பணிப்புரையின் மேல் எடுக்கப்படும் நடவடிக்கைக்கான பாதுகாப்பு.*

**26.** (1) துடர்ச்சி அல்லது வழக்கு நடவடிக்கை எதுவும்

(அ) இச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக நிறுவகத்திற்கெதிராக, அல்லது;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் அல்லது பேரவையின் பணிப்புரையின்மீது அவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது நிறுவகத்தின் அலுவலர் சேவையாளர் அல்லது முகவருக்கு எதிராக தொடரப்படுதலாகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்புரையின் மீது அவரால் செய்யப்பட்ட அல்லது அவரால் செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வழக்கு

நடவடிக்கையில், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்டுள்ளவாறாக, அத்தகைய ஆளினால் உறப்பட்ட செலவு எதுவும், அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதாக நீதிமன்றம் கருதினால், நிறுவத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**27.** ஆள் அல்லது ஆதனத்திற்கெதிரான எழுத்தாணை எதுவும் நிறுவகத்திற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் பேரவையின் உறுப்பினர் ஒருவருக்கெதிராக வழங்கப்படுதலாகாது.

*ஆளுக்கு அல்லது பேரவையின் உறுப்பினர் ஒருவரின் ஆதனத்திற்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப் படலாகாது.*

**28.** இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றவரான ஆள் ஒவ்வொருவரும், நீதிவானொருவர் முன்னரான சுருக்க முறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன் மேல் ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதி ஒன்றிற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்குஅல்லது ஐநூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்குஅல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

*தவறுகளும் தண்டங்களும்.*

**29.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற் படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**30.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப் படுத்தினாலன்றி

*பொருள் கோடல்.*

"உள்ளூரதிகார சபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேசசபை எனப் பொருள்படும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய சபையால் அல்லது பிரதேசசபையினால் பிரயோகிக்கப்படும், நிறைவேற்றப்படும் மற்றும் புரியப்படும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு நேரொத்த அல்லது அதற்கு ஒத்தான தத்துவங்களை, பணிகளை மற்றும் கடமைகளை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தால் அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும்.

"மாகாணசபை" என்பது, அரசியலமைப்பின் XVIIஅ ஆம் அத்தியாயத்தினால் தாபிக்கப்பட்ட மாகாணசபை என்று பொருள்படும்.

"பகிரங்க கூட்டுத்தாபனம்" என்பது, மானியக்கொடை, கடன் அல்லது வேறு வகையிலாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அல்லது முதலுடன் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்படுகின்றதான ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருள்படும்

"பல்கலைக்கழகம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்று என்று பொருள்படும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*